**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.60/2025**

**(TNDG07-0000254-2025)**

1. திருமதி.கவிதா
2. செல்வி.அபிராமி
3. மைனர். பார்த்திபன்
(மைனர் 3-ம் வாதிக்கு தாயாரும்,
அடுத்த சினேகிதியுமான கவிதா
என்பவர் மூலமாக) --- வாதிகள்

// எதிர் //

திரு.J.திருநாவுக்கரசு --- பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 07.03.2025ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்பாக வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.காளிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் T.யுவராஜா அவர்கள் முன்னிலையாகியும், தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2025 மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வழக்குச் சொத்தில் 2,3 வாதிகளுக்குரிய 2/3 பாகச் சொத்துக்களை பிரதிவாதி நலந்திகடு பார்த்து, கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தவறும்பட்சத்தில், நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்குச் சொத்தை மூன்று சம பாகங்களாகப் பிரித்து அதில் 2 பாகச் சொத்துக்களை 2,3 வாதிகளுக்கு வழங்கும் வகையில் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், வழக்குச் சொத்தில் 2,3 வாதிகளின் பாகச் சொத்தை பிரதிவாதி பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்வரை வழக்குச் சொத்தை

பிரதிவாதி வேறு நபர்களுக்கு கிரையம், ஒத்தி, ஈடு போன்ற பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கும்படி கோரியும், வழக்கு செலவு தொகையினை வாதிகளுக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2025 மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டது. எனவே, இவ்வழக்கின் பிராது நிராகரிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 12.03.2026ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.12 16:38:07 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.